T. 7218

# சந்திரா பரணம்

பதிப்பாளர்

நா. சத்தியா

நெறியாளர்

முனைவர் ய. மணிகண்டன்

உதவிப் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
பரிதிமாற் கலைஞர் வளாகம்
சென்னை - 600 005.
2011

T. 7218
T. 7218

# சந்திரா பரணம்

**சுவடியியலும் பதிப்பியலும்**
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
**நா. சத்தியா**

நெறியாளர்
முனைவர் **ய. மணிகண்டன்**
உதவிப் பேராசிரியர்

**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
பரிதிமாற் கலைஞர் வளாகம்
சென்னை-600 005.
2011

# சுவடியியலும் பதிப்பியலும்

*2010-2011ஆம் ஆண்டிற்கான*
*பட்டயப் பேற்றிற்காகச்*
*சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு*
*அளிக்கப்பெறும் பதிப்பேடு*
*பதிவு எண் : 43011061*

**முனைவர் ய. மணிகண்டன்**
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
பரிதிமாற்கலைஞர் வளாகம்
சென்னை-600 005.

# நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழக, "**சுவடியியலும் பதிப்பியலும்**" பட்டயப் பேற்றிற்காக 2010-2011ஆம் கல்வி ஆண்டில் "**சந்திரா பரணம்**" என்னும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இப்பதிப்பேடு என்னுடைய மேற்பார்வையின் கீழ் செல்வி **நா. சத்தியா**வின் சொந்த முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது என்று சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

ய. மணிகண்டன்

நாள் :

இடம்: சென்னை-5.

**(ய. மணிகண்டன்)**

நா. சத்தியா
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
பரிதிமாற் கலைஞர் வளாகம்
சென்னை-600 005.

# பதிப்பாளர் உறுதிமொழி

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும் "சந்திரா பரணம்" என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு, எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும், இது இதற்கு முன்பு வேறு எந்தப் பட்டயத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

பதிப்பாளர்

நா. சத்தியா

நாள் :

இடம்: சென்னை-5.

(நா. சத்தியா)

என் பாசமிகு

தாய், தந்தை

மற்றும்

சகோதரர்களுக்கு……

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | 13 |
| பதிப்புரை | 15 |
| சந்திராபரணம் | 19 |
| பாடற் முதற்குறிப்பு அகராதி | 57 |

# நன்றியுரை

சுவடியியலை பட்டயப்படிப்பாக வைத்துள்ள சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், முதுகலையில் சுவடி பற்றிய புரிதலையும் மாணவர்கள் பெற வேண்டும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்திய தமிழிலக்கியத்துறைத் தலைவர் பேரா. வீ. அரசு அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடியைப் பதிப்பிக்க அனைத்து நிலைகளிலும் நெறியாள்கை செய்த பேரா. ய. மணிகண்டன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வகுப்பு எடுத்த விரிவுரையாளர் இளங்கோ, லதா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கீழ்த்திசை சுவடி நூலகத்தார்க்கும் சுவடியைத் தேர்ந்தெடுக்க உதவி புரிந்த என் தோழியர்களான ர. சக்தி பிரியா, சு. சரோஜினி, ப. தீபா அவர்களுக்கும் என் நன்றி.

என்னை வளர்த்து படிக்க வைத்துக் கொண்டிருக்கும் என் அன்புத்தாய், தந்தைக்கும் மற்றும் நான் கல்வி பயில பல்வேறு வகையில் ஊக்கமளித்து இன்முகத்துடன் உதவி செய்து வரும் என் உடன்பிறந்த சகோதரர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

# பதிப்புரை

*சந்திரா பரணம் என்னும் இப்பதிப்பேடு சண்முகனை தொழுது பாடப்பட்டுள்ளது. மேலும் இதிலுள்ள பாடல்கள் கோள்களைப் பற்றியும், இலக்கினப் பலன்களையும், ஜோதிடங்களையும், மரணம் மற்றும் சகுனம் பற்றிய செய்திகளையும் மீனம், மிதுனம் போன்ற இராசிகளைப் பற்றியும் குறிப்பிடுகிறது. மேலும் மக்களிடம் ஊறி இருக்கக்கூடிய இராசிபலன் பற்றிய செய்திகளும் இதில் குறிப்பிடப் பட்டுள்ளது.*

*இதிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் கலிவிருத் தத்தால் அமைந்துள்ளது.*

*இந்நூலில் மொத்தம் 117 பாடல்கள் உள்ளன. இவற்றில் 91 பாடல்கள் அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 56 பாடல்கள் "விளம் மா தேமா" என்னும் வாய்பாட்டிலும், மேலும் 35 பாடல்கள் "மா மா காய்" என்னும் வாய்பாட்டிலும் பிரிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் 13 பாடல்கள் எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 10 பாடல்கள் "மா கூவிளம் விளம் மா" என்ற வாய்பாட்டிலும், மீதமுள்ள 3 பாடல்கள் "காய் காய் காய் மா" என்னும் வாய்பாட்டில் பிரிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் கலிவிருத்தம் என்னும் வாய்பாட்டில் 9 பாடல்களும், 2 பாடல்கள் கட்டளைக் கலித்துரை வாய்பாட்டிலும் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் 2 பாடல்களுக்கு மட்டுமே அப்பாடலின் ஓசை நயம் மற்றும் பொருளமைதி கருதி வாய்பாட்டு அடிப் படையில் பிரிக்கவில்லை. மொத்தம் 115 பாடல்களுக்கு மட்டுமே வாய்பாட்டு அடிப்படையில் பிரிக்கப்பட் டுள்ளது.*

**விருத்தம் - வகைகள் :**

1. அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
2. எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
3. எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
4 இரட்டை ஆசிரிய விருத்தம்
5. கலி விருத்தம்
6. சந்தக் கலி விருத்தம்
7. கலிச்சந்த விருத்தம்

இவை உள்ளிட்ட பல்வேறு வகைகள் உள்ளன.

**அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பின்பற்றப்படும் வாய்பாடுகள் :**

1. "விளம் மா தேமா
விளம் மா தேமா".

2. "மா மா காய்
மா மா காய்"

3. "காய் காய் காய்
காய் மா தேமா".

4. " மா விளம் விளம் விளம்
விளம் காய்"

5. "மா விளம் மா
விளம் விளம் மா"

6. "விளம் விளம் மா
விளம் விளம் மா"

7. "மா மா மா
மா மா காய்"

**இந்நூலில் பயின்று வரும் வாய்பாட்டிற்கான சான்றுகள் :**

**சான்று 1 :**

உரைத்திடி லொன்று வாக்குக்
 குடையகோள் பன்னொன் றுக்கோர்
திருத்திய மூவர் கூடில்
 திரவிய வான மென்க
வருத்தபன் னொன்று வாக்கோன்
 வலியபன் னொன்றில் வாழ்கில்
பொருத்தமா யாட்சி யுச்சி
 மாமினி பொன்னுண் டாமே.

இப்பாடலில் "விளம் மா தேமா" என்னும் வாய்பாடு பயின்று வந்துள்ளது.

**சான்று 2 :**

கன்னி மீன்மி துனசிங்க
 கைவில் கும்ப மிவையினிலே
பன்னு கோட்க ளொன்பதுவும்
 பதிய ஆறு ராசியினில்
மன்ன னென்று சேனையானை
 வணங்கு மப்ப ரிவுடனுடன்
தென்ன னென்று ராசயோகம்
 செப்பி னார்கள் செகத்தினிலே.

இப்பாடலில் "மா மா காய்" என்னும் வாய்பாடு பயின்று வந்துள்ளது.

**எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் :**

இவ்விருத்தத்தில் 3 வகையான வாய்பாடுகள் உள்ளன. அவை

1. "காய் காய் மா தேமா
 காய் காய் மா தேமா"

2. "காய் காய் காய் மா
காய் காய் காய் மா"

3. "மா விளம் விளம் மா
மா விளம் விளம் மா".

**எண்சீர் கழிநெடிலடி:**

**சான்று :**

தீய்மை தீர்ந்துசி றப்புடன் செல்வ
செகத்தில் வாழவுந் தீர்க்காய்சோடு வாழ்வர்
வாய்மை யானதி ருமூர்த்திசண் முகர்
மகிழ்ந்த ருத்திரன் தீக்கோளுடன் கூடில்
ராமை யானவர் கேந்திரி கோணத்தில்
நன்மை யாகவே நின்றிடில் செல்வம்
தூய்மை யாகிஇ ருந்தால் தீர்க் காய்சும்
துக்க மொன்றிலை வெகுநாளி ருப்பனே.

இப்பாடல் "மா கூவிளம் விளம் மா" என்னும் வாய்பாட்டில் பயின்று வந்துள்ளது.

**கட்டளை கலித்துறை (சான்று)**

ஓரைத்திரி கோணமுரு முயர்கேந்திர மதனில்
சீருற்றதோர் சனிசேர்ந்திடில் திறமாஞ் சுபருடன்
வாரக்குழல் மானேசிசு வயசும் பெரிதெனலாம்
பேருற்றதொரு தீர்க்காயுசு என்னறனர் பெரியோரே.

இப்பாடல் நேரிசை கட்டளைக் கலித்துறை என்னும் வாய்பாட்டில் பயின்று வந்துள்ளது.

**கலிவிருத்தம் :**

கொடியவர் குடையவன் பாவி யாவான்
நெடிய லக்கினத் தாதிபன் றீயனாம்
மிடியான பாவி குலத்தினில் லேதாய்
படிய மூந்தன ரென்றனர் பாவையே.

இப்பாடல் கலிவிருத்தம் என்னும் வாய்பாட்டில் பயின்று வந்துள்ளது.

ஹரி ஓம் நன்றாக

# சந்திரா பரணம்

1. செங்க மலத்தி ருவுரை செய்திடுந்
தங்க மாநிதி வாழ்வு தழைத்திடும்
பொங்க ராயக் குருபு னைந்திடுஞ்
சங்க ரன்சுதன் சண்முக னைத்தொழே.

2. உரைத்திடி லொன்று வாக்குக்
குடையகோள் பன்னொன் றுக்கோர்
திருத்திய மூவர் கூடில்
திரவிய வான மென்க
வருத்தபன் னொன்று வாக்கோன்
வலியபன் னொன்றில் வாழ்கில்
பொருத்தமா யாட்சி யுச்சி
மாமினி பொன்னுண் டாமே.

3. பொன்னரா சென்ம வாக்கோன்
பொவிந்தபன் னொன்றிக் கோளும்
நன்னய மாகச் சென்ம
ராசியை நண்ணு மாகில்
சொன்னதில் ரெண்டு நட்பால்
தூயலக் கினக்கோள் சார்கில்
தென்னவ னாக மிக்கத்
திரவியந் தேடு வானே.

4. தேடிய லக்கி னக்கோன்
சிறுவனின் வாக்கில் நிற்கில்
நீடிய பலமா யாட்சி
யுச்சங்கள் மேவி நிற்கில்
கூடிடுஞ் சொர்ண முத்துக்
குறையாது பாக்கி யங்கள்
வீடுடன் மான மட்டும்
பாக்கிய முண்டா மின்னே.

5. மின்னிய வாக்கு நாதன்
வியாழத்தி னுடனே கூடில்
பன்னொரு நவத்தோன் கோன
பதியகேந் திரத்தி ரிகோணம்
தென்னவர்க் கமைச்சன் செல்வன்
திரவிய மிகவுந் தேடும்
மின்னுல குயர்ந்த வாழ்க்கை
யென்றனர் மிகவு மாதே.

6. மாதுகே லக்கி னக்கோள்
மருவகேந் திரத்தி லாக
திதரு நான்கோ னஞ்சொல்
தெரிந்திடும் தவத்தோன் தானும்
போதுரு கேந்தி ரகோணம்
பொருந்திடச் சுதற்குத் தானும்
ஓதமுந் தனமுங் கீர்த்தி
யெய்துமென் றிவற்குத் தேனே.

7. தேனேஒ ரைக்குடை யோனும்
திரண்டவாக் கோன்பன் னொன்றோன்
ஆனைவைத்தோன் தசமி டத்தோன்
ஆட்சியுச்ச மாகி டீனுங்
கோனாம்ர சர்க்கபி மானி
குருகாசெல் வன்குலோத் துங்கன்
நாலாவ கைநிதி தேடு
நலஞ்சேர ருமைநல் நாரி.

8. நாரி பாகன் மலரப்பன் நவத்துள்ளோன்
சீரி யாக நட்பாட்சி யில்சேர்ந்திடில்
ஏரி வாகன் பூமியில் இளைப்புற்ற
பாரி லோகமும் பலிக்கும் பல்லொன்றே.

9. ஒன்று நான்கெழு பத்திடத் துள்ளவர்
ஒன்றி ளிவர் கேந்திரத் திலுற்றிடில்
மன்றி லோடிடும் வாழ்வுநற் கீர்த்தியும்
வென்றி கற்கவி மானியு மீன்கொடி.

10. கொடியவர் குடையவன் பாவி யாவான்
நெடிய லக்கினத் தாதிபன் றீயனாம்
மிடியான பாவி குலத்தினில் லேதாய்
படிய முந்தன ரென்றனர் பாவையே.

11. பாவக் கோளுட லுயிரைப் பற்றிடில்
மேவப் பாவர்கள் நோக்கிடில் மெல்லியே
தாவத் தானந்த தன்குலு நாசமாய்
ஆபத் தாலழி வன்றுன் மரணமே.

12. மரணம் ரெண்டி லெட்டிடத்தில்
வருலக் கினத்தில் உடல்தன்னில்
வருகு பாவர்க ளிருந்திடினும்
அமையாச் சுபர்கள் நோக்கிலதால்
பெருகுஞ் சிசுவுக் கற்பாய்சு
பிதாக்கள் கேடு நிதியழிதல்
சுரவுஸ் கிறுசு தனதானியம்
சோர மாகு மெனும்பொன்னே.

13. பொன்ன யைப்ப ருதிமூன்றில்
பொலிவில் லாற்றீக் கோள்சாரில்
தன்னில் நேர்மூத் தோர்சாவான்
சனிசெவ் வாய்மூன் றிற்சாரில்
மின்னி யதீய்க்கோள் நோக்கில்
வேந்த னுக்கி ளையதேசாம்
அன்ன மேதப் பாதென்றார்
அரிய நூல்தெ ளியவாய்ந்தோர்.

14. அன்றதோர் மூன்றி நாதன்
ஆரெட்டில் வியத்தி லாகற்
றோன்றிடப் பவக்கோ ளோடே
பகைநிசந் தோன்று மாகில்
ஈன்றசே யதற்கு முன்பின்
சகோதர மில்லை யென்று
ஓர்ந்துநல் முனிவோ ரன்று
உரைத்தனர் குணமாய் கொம்பே.

15. கொம்போ நான்கோன் வெண்மதியோன்
குலாவக் கேந்தி ரதிரிகோணம்
நம்பும் சுபர்க ளுடன்கூடி
நண்ணு மாகில் நல்நாரி
வம்பு மிலாதாம் துவையண்மை
நலஞ்சேர் வித்தை மாதுசுகம்
பண்பும் பூமிக் காலியுடன்
பரிவா சங்கள் வர்க்கென்றே.

16. பரிசோ னான்கோ னேழிடத்தோன்
பத்து நவத்தொன் ரன்பதினோன்
உரியக் கேந்தி ரதிரிகோணம்
நட்பா யாட்சி யுச்சமுற
பெரிய யோக முத்தியோகம்
பிறவு டீக ளதிசீலன்
மருவு கெந்தப் பூவாசம்
மிருக மதமும் சிவிகைமன்னேன்.

17. மன்னும் நூன்கோன் தனமஞ்சோன்
மருவக் கேந்தி ரதிரிகோணம்
பின்னு மாட்சி யுச்சமுற
பிதற்று நவக்கோள் நோக்குறவே
மன்னர் சிவிகை களிறுபரி
வானர் சாமரை யிமிருகமதம்
கன்னி யனங்கள் தமிழ்ப்பிரியன்
கஞ்ச மாது மரித்திடுங்காண்.

18. காணு நூன்கோன் பதினொன்றோன்
கருது மோதைக் கதிவானும்
பூணு நவத்தோன் தவத்தோனும்
போக வாரெட் டீராறில்
ஆகு மிவர்கள் பகைநீசம்
அஸ்த்த மானங் களாயிடினும்
தோணுந் தரித்திரன் பொய்சொல்லுஞ்
சுகமொன் றில்லா னெனுந்தோகாய்.

19. தோகைக் கேளைந் தோன்வாக்கோன்
சுருதி மால்மறை யோன்தோன்றில்
தாக நட்பாச் சிவுச்சம்
தனித்தி ரிகோண கேந்திரமும்
பாக நல்ல வரோடெய்த
பார்த்தி டசெகத் தின்மீதில்
யோக நல்கள் ஸ்த்ரபுத்ரர்
யோக மாமென் னுமின்னே.

20. மின்னிய வர்க்கு நாதன்
வியாழத்தி னுடனே கூடி
நன்னய மாக வெள்ளி
மேதையு மதியும் நண்ணில்
பொன்னுடன் கலந்து வாழ்வான்
புவிசிறு சடிமை கீர்த்தி
கன்னலின் மொழியி னாளே
யோகவான் கருதிச் சொல்லே.

21. கருதிய வாக்கோன் மாலோன்
கனகனின் கேந்த்ர கோணம்
பெருகிய உச்ச மாச்சி
பிலத்திட வித்து வானாம்
பருகிய ஆறு சாஸ்த்ரம்
படிக்கவா சிக்கப் பண்பாய்
பொருளுடன் கணித மென்னும்
புலவனாம் புவியின் மாதே.

22. மாதுகேள் சிறிது கோள்கள்
வாக்கினில் மருவி நிற்கில்
தீருமாம் பாவக் கேடே
சேர்ந்திடில் பகைநே சத்தில்
வாதுடன் பிணியு நோயும்
மக்களு நசியு நின்று
போதுரு மிடிய னாகி
யிரந்துவுண் பன்போல் மட்டும்.

23. மட்டுரை யஞ்சோன் பொன்னன்
மருவிடச் சுவச்சேத் ரத்தில்
திட்டமாய் கேந்தி ரத்தில்
திரிகோணஞ் சேரு மாகில்
பட்டுவஸ் திரங்கள் ரத்னம்
பரிமள சுகந்த மிக்க
திட்டமாங் குலத்துக் கெல்லாம்
மேலதாய் செல்வ மெய்தும்.

24. செவ்விய கனக னிந்து
சீதிரை யசுரர் கோமான்
தவ்விய கேந்தி ரத்தில்
திரிகோணஞ் சேரு மாகில்
பவ்விய மறிவன் ஞானி
பலகலை பயிற்றல் வல்லன்
கவ்விய புத்தி ரன்தான்
கவிதைகொண் டாள வல்லன்.

25. வல்ல இருமூன் றிடத்தோனும்
மரையோ னோரைக் கதிவோனும்
செல்ல மூன்றி லீராறில்
தீக்கோ ளுடனே சேர்ந்திடினும்
அல்லல் நிதமும் ரோகத்தால்
அடைவே சத்ரு ஆயுதத்தால்
கொல்லு மழுவாற் குறைப்படுவன்
என்றே இதனைக் கூர்ந்துரையே.

26. உரைக்கு மாரிடத் தோன்பாவ ராயுற
நிரைக்கும் பாவங்கள் தன்னுடன் நின்றிட
வரைக்கும் பூண்முலை மாதுகே ளிச்சுதன்
இரைக்குந் துன்மர ணங்கள்வந் தெய்துமே.

27. எய்துங் காரி யரவுக ளாறெட்டில்
நொய்த பாவிகள் நோக்குற வீசுபால்
பைய பார்வைக ழன்றிடச் சேர்ந்திடார்
தைய லேதுன்ம ரணங்கள் சாற்றுமே.

28. சாற்று மேலோன் சுபராகிற்
றானத் திருந்தோன் சுபக்கோளாய்
போற்றுஞ் சுபர்கள் நோக்கிடவே
பொருந்து மெட்டுச் சுத்தமெனத்
தோற்றுங் கலஸத் திரயோகம்
புவியா பர்ணம் நற்கிரகங்
கீர்த்திக் கனங்கே தைசேத்திரஸ்
கிட்டும் வாக்கு மெனச்சொல்லே.

29. சொல்லு மேழுக் குடையவனும்
சுபக்கோ ளாகில் சுபருடனே
செல்லக் கேந்திரத் திரிகோணம்
சேரத் தீயோர் நோக்கன்றி
நல்ல கலஸ்தி ரமகிவாழ்வு
நாரி தந்த னைச்சேர்த்தி
வல்லக் கரும முடிப்பனெனும்
என்றார் மறைநூல் வல்லோரே.

30. மறையோன் கேந்தி ரமதிலுடனே
வழங்கு புகரு மறைவின்றி
திரைசே ரிருநான் கேழிடமும்
சிலகோ ளிலதால் சுத்தமென்பார்
பிறைசேர் நுதலே யதியோகன்
பெரியோ ரருமை குருபுத்தி
குறையா வாழ்வுஞ் சுதற் பெறும்
கொடுக்கும் பலங்கள் மிக்ககொம்பே.

31. கொம்பே வெள்ளி ஏழிடத்தோன்
குறுக எட்டி லீராறில்
வம்பு பவர்க்கோள் நோக்கிடினும்
மறைந்த கிரகம் கிட்டிபட
நம்புங் களஷ்த்தி ரமிடியுண்டாம்
நலமொன் றில்லை மீறுகுணம்
வெம்புங் களஷ்த்திரமுந் துஞ்சுமென்றே
முனிவ ருரைத்தா ரின்னுதலே.

32. உரைக்கு மிருநான் கிடத்தோனும்
முற்ற காரி மதிபுகரும்
நிரைக்கக் கேந்தி ரதிரிகோணம்
நிற்க மறையோ ரிவர்பார்க்க
இசைக்கு முடலு முயிர்சுத்தம்
ஈன்ற சுதற்கு ஆயுசுதான்
வரைக்கு ளுயர்ந்த முலைமாதே
மைந்தன் வயசு வலுவாமே.

33. ஆமே இருநான் கிடத்துள்ளோர்
ஆகு சனியும் பாவியுடன்
தாமே யாரெட் டீராறில்
தரிக்கச் சுபர்கள் சாராதால்
போமே வயசு அற்பாய்சு
புதல்வன் நான்கி லாறெட்டில்
சாமே எனவும் முனிவரன்று
சாற்றும் பலன்கள் தப்பாதே.

34. தப்பா திரவி குருதிசனி
சார எட்டில் சுபரிலதால்
இப்பாற் பகைகள் நீசமுற
இருக்க அஸ்த்த மானமாக
முப்பால் வினையும் தன்னாலே
முடியுஞ் சிசுவுக் கற்பாய்சு
இப்பால் வயசு பன்னிரண்டில்
இருக்கு முயிரு மிழப்பானே.

35. இழக்கு முயிரே உடல்தனிலே
இரவி குருதி சனியரவு
வழக்க மதிலே மருவிடினும்
மைந்தற் காய்சு குறைந்திடுதல்
குழல்கட் டுடைய குவிமுலையே
குறுகு மாண்டில் பதினெட்டில்
இழக்கு முயிரு மிருநிதியும்
ஏகும் பலங்கள் அதுவோரே.

36. ஓரைத்திரி கோணமுரு முயர்கேந்திர மதனில்
சீருற்றதோர் சனிசேர்ந்திடில் திறமாஞ் சுபருடன்
வாரக்குழல் மானேசிசு வயசும் பெரிதெனலாம்
பேருற்றதொரு தீர்க்காயுசு என்றனர் பெரியோரே.

37. சொல்லலாஞ் சனிகேந் திரிகோணத்தில்
செல்லவே சுபர்நோக்கி னும்சேர்ந்திடில்
வல்லவ னறவானென வாழ்ந்திந்த
தொல்லுல கினில்வாழ்ந்து துலங்குமே.

38. முற்று ரண்டொன்று மூன்றுபன் னொன்றுள்ளோன்
குற்ற மன்றிவர் கூடநட் பாட்சியில்
வெற்றி வேந்த ரமைச்சர் விரும்புறும்
மற்றி ரத்தவ நாமெனும் நாரியே.

39. தருவொன்பதி லரவேயதி தானாதிபன் பவரால்
வருமாதவன் பிதிர்தானதை மருவப்பவ ருடன்
இருமூன்றினு மும்மூன்றினு ஈராறினிலும் தந்தைக்கு
அருளாயிசு நசியுமென வமைத்தா ரறிவுளர்.

40. கன்னி மீன்மி துனசிங்க
கைவில் கும்ப மிவையினிலே
பன்னு கோட்க ளொன்பதுவும்
பதிய ஆறு ராசியினில்
மன்ன னென்று சேனையானை
வணங்கு மப்ப ரிவுடனுடன்
தென்ன னென்று ராசயோகம்
செப்பி னார்கள் செகத்தினிலே.

41. ஒன்று நான்கி லேழுபத்தி
லுறுதி யான சந்திரனும்
நன்று சுக்கி ரன்வியாழன்
நயன பார்வை நண்ணிடவே
என்று வாழ்வன் மன்னனாயி
ருந்து வேதி யர்க்குள்ளே
மன்ற லோடி கோடிகாலம்
வரிசை பெற்றி ருந்திடுமே.

42. மின்னியலா பத்துடையோ னெரிஅங்கி வித்தான்
மிகுந்ததனத் துடையவராய் வரவீடேற் பனவும்
பின்னுமல ரங்குசத்தான் நல்குணக்கேந் திரமாய்
பிரிவில்லா தவருன்முன் பிருகானி லேர
மன்னியஆ யுட்பாக்கி யம்லாபம் பெற்றும்
மதிபுகர்பொன் மாலிவர்கள் பார்க்கவுட னிருக்க
இன்னிலத்தில் சிருயோதே யழகுசெல்வ முண்டாம்
இசைந்திடுவர் வாகனமும் இயலெழுபத் தெட்டே.

43. மிகுந்தசேய வர்களாக னிருவருஸ்கேந் தரிக்க
மிக்கசுப ரோடுபாவ ரீராடு பாவர்
புகுந்திடுவா லிபத்தில்தா னத்திலுற்றி ருக்க
புதியலாபா திதானாதி பதிபருமே பார்க்க
பகுந்துடனி ருக்கும்செல் வமும்பல் லக்கும்
பாக்கியங்கள் தந்தைத்தாய் பார்த்துமுபுங் களிப்பார்
முகுந்தனெனுங் கயிலையினி லுகினிற்சம் மதிப்பார்
மோசமொரு பத்தாறில் முடிந்திடுமென் றென்னே.

44. வாகனகா ரகனுதித்த அங்கிவித்தி லுள்ளோன்
வலியலாபத் திலிருக்க அவ்விடத்தி லுள்ளோன்
போகதானத் துடனேபொருந் திடஅவ்வி டத்தோன்
புதியபன்னி ரண்டிலுற நான்கிடத்தி லுள்ளோன்
சேகரமா மூவுயிர்க்கு முன்றுபதி னொன்றில்
தீயவற்கொரு பிரமாய பன்னிரண்ட தாக
வாகனமுள் ளவராவர் பதினாறு முதலாய்
வழங்கிடுவ ரெழுபதுட னெட்டினிலிவ் வுயிர்க்கே.

45. தேசுநல் லன்னங் குற்ற
செவ்விய பவ ரொழுக்கம்
மாசிலாத தூசு டுத்தல
மகிழ்ச்சி யாபரணம் பூணல்
வாசம்நல் வாகனஞ் சொல்வாள்
வாழ்வில்லா தரித்திரங்கள்
ஆனயொ லுழன்று ழுங்கண்
அறிந்துரை லக்கி னத்தால்.

46. குடுயபங்களின் வாக்கு நேத்ரம்
குலாவிய முகம்வ லக்கண்
கடும்பகை புருவம் உற்ற
கதைதிரம் வசனம் வண்மை
இடும்புகன் வசன மோச
மிதமிலார் வார்த்தை சொல்லத்
திடம்படும் நூல்வல் லோர்கள்
சித்துளோர்க் குரைத்த வாறே.

47. சகோதரஞ் செவிகள் தானஞ்
சகாயமும் கழுத்து மார்பும்
சகோதரம் ணலது காது
கனிமுல மருந்தல் சொல்லல்
அகோசர நூலி லல்லோ
ரறிந்துரைத் திடுதெ லோதல்
இகோசரந் தெரிந்து யானும்
மேதினி யோர்க்குச் சொல்வேன்.

48. மனைசுகம் பெற்று வன்னை
மானமே சேர்வி ருத்தி
இனியவா கனபோ சிப்பு
இருதயந் தனமுஞ் சோகம்
சுனையுள்ள ஏரி கூபம்
சுந்திரஸ் கோவில் தோட்டம்
அனையவும் வீட்டி லுள்ள
அதிபதி யாலே சொல்லே.

49. சத்தியஞ் சிசுவு பத்தி
சலியாம லோத லுண்மை
சுத்தமாம் போச னங்கள்
இருதயம் விவேக நன்மை
அத்தனார் தயவு ஆண்மை
அம்பலத் தாடல் காணல்
இத்தனைச் சொல்வ தெல்லாம்
இயல்புகள் ஐந்து நாலே.

50. சத்துருஞ் சாரர் காயஞ்
சயவிகி னங்கள் தோப்புள்
இத்துள வயிறு நல்ல
மதுரதின் சுவைய ருந்தல்
சுத்திரா வினையால் மோசம்
தோகையால் வினையால் நைதல்
இத்துள பயங்க ளெல்லாம்
இயம்புவா ராறா னாலே.

51. பாரியே பதிப ருப்பு
தயிர்பர நெய்யாம் வெல்லம்
சீரிய சுரமே யோகம்
தைத்திரங் குய்ய லீலை
பூரிய புணர்ச்சி சித்ரம்
பூசண மகிழ்ச்சி யாண்மை
கூறிய எழில் கோள்கள்
வலியறிந் தியல்பு கூறே.

52. அன்னமோ சுகமே சொல்லில்
அந்திய கால தேசம்
மின்னறும் மரண மென்று
மிடர்வல் மரணஞ் செய்தல்
நன்றெனும் சீவன் தானும்
நல்குல மாவ தெல்லாம்
மின்னுறும் விழியி னாலே
எட்டிடத் தறிந்து சொல்லே.

53. திரவியம் வரத்து நல்ல
திரைகாலம் லாவஞ் சேர்தல்
உரவிக ளராப ரணம்
உடன்பிறந் தோர்கள் மூத்தோர்
பரவிய வகுத்து நன்மை
பாக்கிய முள்ள தெல்லாம்
வரவிது வின்ன தென்று
மகிழ்ந்துரை பன்னொன் றாலே.

54. அங்கமு மதியின் நட்டம்
வரமாட்சி டக்கண் பரதம்
துங்கம சயனத் தானம்
துயரங்க ளாகச் சேர்தல்
செங்கண்மால் தேடிக் காணார்
திருவரு ளுரைத்த நூலை
பங்கய மூர்த்தி நாதன்
பாருளோர்க் குரைத்த நூலே.

55. இரவிக் கெட்டில் சேய்நிற்க
சசிதாய் மாதர் சொல்பதிலும்
கரவா சனியன் நின்றிடினுங்
கடிதாய் மாதர் கனலுடன்போம்
புரவா யிரவில் செனிக்காற்கு
புகழு மதற்கைந் தொன்பதிலும்
குருதா கைமேல் நின்றிடினும்
குறித்தால் காணும் பலனிதுவே.

56. இரவிக் கெட்டில் சனிசெவ்வாய்
இருக்கச் சுபக்கோள் நோக்கமுற
தரவா இருக்கில் பிதாமரணந்
தபன னெங்கே நின்றிடினும்
இரவாச் சனிசேய் நோக்கமுற
கலந்து சனிசேய் கதிர்நடுவாய்
மரவிற் சனிதான் கூடிடினும்
மரிப்பன் தந்தை யோராண்டில்.

57. சரத்தி லிரவி பாபருடன்
தயங்கி நிற்கில் பிதாமரணம்
உரைத்த விஷத்தால் சத்தியத்தால்
உகந்து தன்னால் வருமரணம்
நிரைத்த எட்டில் இரவிநிற்கில்
நிலநூல் புதல்வ நோக்கமுற
பொருத்த பகலில் சனித்தாற்கு
பூவே வலமாய் பிதாமரிப்பன்.

58. கோட்டிப் பருதி சனிநிற்க
குறுதிக் குறுகி நோக்கிடினும்
நாட்டிப் பகலே செனித்திடினும்
நலந்த தந்தை தேசமதில்
ஓட்டி விடுமே தப்பாது
உதவா னிவருக் கவர்தானும்
கோட்டி லனையாள் மயிலணங்கே
குறித்தார் தமிழின் நூல்வல்லோர்.

59. ஆட்டி லலவன் துலைமானும்
அதனில் பருதி சனிசேயும்
கூட்டி வருமே வக்கிரக்கோள்
குலாவி நோக்க முற்றதனால்
நீட்டி லிரவில் செனித்தாற்கு
நிலையா தன்னை தேசமதில்
ஓட்டி விடுமே தப்பாது
உடலும் யோக மொண்டொடியே.

60. எங்கே யாகி லிரவிநிற்க
இடர்சேய் மந்த னுடன்கூடில்
மங்கை நல்லாள் பெறுமுன்னே
மகவின் தந்தை மரித்திடுவன்
கங்கை யரவு மதிமுடியோன்
கடவு ளுமைக்கே வுரைத்தமொழி
செங்கை வேல னடியார்கள்
செகத்துள் ளோர்க்கு ரைத்தனரே.

61. செனித்த ஓரைச் சசிதனக்குத்
திறமா யஞ்சு யேழதனில்
இனித்த சுபக்கோ ளிருந்திடினும்
இனிதாம் பெண்டிர் மக்களுண்டாம்
மனித்த தீய்க்கோ ளிருந்திடினும்
அதற்கு ரெண்டு பக்கமுற்றால்
குனித்த தீய்க்கோள் நோக்கமுற்றால்
குடும்ப மிகவு மில்லையென்றே.

62. தேன்மொழி தன்னி லேதான்
செனித்திடில் கயில மந்தன்
ஊனமாங் குடும்பந் தானும்
உதவாது மென்று சொல்வாய்
பானுவென் மந்த னானால்
பலியாது மனைவி யாறு
மாணவி விழியாள் மின்னே
மறைநூல் வல்லோர் சொன்னார்.

63. ஐந்தினில் பூமன் நின்றால்
அழிந்திடும் புதல்வர் தானும்
விந்தையே ழரியே யாகில்
விளங்கிடா மனைவி யாகும்
மைந்தனில் தாலும் புத்தி
சனிவர டாயி ருக்கும்
நந்துள குளிகன் மாந்தின்
நலம்பட நிற்க லாகார்.

64. ஆகாது புதல்வர் தானும்
அவனியுள் ளோர்க்குச் சொல்வோன்
பாகாது தத்துப் புத்ரர்
பலித்திடு மிதுவே கண்டாய்
பூபாலன் தன்கேள் பத்தில்
புகரவ நிற்ப தாகில்
கூவாத மயிலே மின்னே
கோதைகேள் நோயால் மாள்வான்.

65. சீதரன் தனக்கு முன்பின்
தீயதைப் பற்றி நிற்கில்
காதலி கனத்தின் தேவ
ராறினில் சுபரி ருக்க
மோதமா யிறக்கு மென்று
மொழிந்தனர் நூல்வல் லோர்கள்
தாதுசேர் குழலி னாளே
தரணியுள் ளோர்க்குச் சொன்னேன்.

66. ஓரைநா வாங்கி ஷத்தி
லுடன்சனி செவ்வாய் கூடில்
பாரினில் பிறந்த தந்தை
பரசத னாகு மென்றே
ஆறவே லக்கி னத்தி
லணிமதி செவ்வா யேழில்
சீரதாய் மாறி நிற்கில்
சிசுபர சாத னாமே.

67. உதித்த ஓரைக் கேளஞ்சி
லொன்ப தினில்நி றையாகவே
மதித்த மதியுஞ் சனிதேயும்
மருவி நிற்கில் பரசாதன்
கதித்த சனிசேய் மதிநோக்க
காதல் தாயு மிகவிருக்க
பதித்த பரதாய் பரிசாதன்
பரிவாய் வளர்க்கப் பலாபலனே.

68. கதிரன கண்டந் தன்னில்
கடும்பகை கிரகங் கூடில்
அதிரவே நேச மானால்
அன்னையு மலச்ச லாவான்
பிதுருள வர்க்க மெல்லாம்
பிரபல மாகா தென்று
சதிர்முடி யோனு ரைத்தார்
தரணியா லுள்ளோர்க் தானே.

**69.** கறைமதி நேச மானால்
காயமும் நிலைநில் லாது
பிறைமதி கண்டந் தன்னில்
பெரும்பகைக் கிரகங் கூடில்
நிறைமதி பெற்ற தாயார்
நெருங்கிய நோயால் மாள்வாள்
குறைமதி திங்கள் குற்றம்
குவலயத் தோர்க்குச் சொன்னோம்.

**70.** செய்யவன் கேந்தி ரத்தில்
தீயகோள் கூடி நீசம்
அய்யமாய் நிற்கும் போது
அகமனை தீய்ப்பா டாகும்
மெய்யொடு வசனங் கேடாம்
வேந்தரால் பிடியுண் டாகும்
துய்யவேல் விழியி னாளே
சோதிடத் துரைத்த வாறே.

**71.** புந்திதான் கண்டந் தன்னில்
பொருந்திராக் கிரகங் கூடில்
வந்திடு நீச மானால்
வாக்கது நன்ற தாகா
செந்தமிழ் நுவலு வார்தா ?
தீவினை நூலைக் கற்பன்
சுந்திர வேற்கண் மாதே
தொல்புவி யோர்க்குச் சொல்வேன்.

72. சுரர்குரு கேந்தி ரத்தில்
துயரமே கோள்கள் கூடில்
மருவியே இருக்கு மாகில்
மனமது சால நூவன்
பெருகிய வாழ்வு குன்றும்
பந்துவுந் தூர மாகும்
கருதிய தொன்று மாகா
காசினி யோர்க்குச் சொன்னேன்.

73. மழையவன் கேந்தி ரத்தில்
மறைந்திடில் தீக்கோள் கூடில்
பிழைகளால் நீச மாகிப்
பிணங்கியே நிற்கு மாகில்
அழகிய பெண்டிர் மக்க
ளிலாதவள் ஐய மேற்பார்
கழைநிகர் கையி னாளே
காசினி யோர்க்குச் சொன்னேன்.

74. முதுமகன் கேந்தி ரத்தில்
முயங்கவே நீச மாகில்
அதிரவே வினையால் மாய்வன்
கிரகமே ளகுச மாகில்
சதிர்பெறு மரசு மில்லை
தாரணியில் மெலிவோ ராகும்
கதியெது மில்லை மின்னே
கிளைதனில் கேடு மாமே.

75. பிதிரீ சன்ரா சிகெட்டாராய்
பிறக்கில் சென்மம் பகையாவன்
பிதிர் சன்தர் மதானலாபம்
பிறக்கில் பிதாவு டன்யோகும்
பிதிரீ சன்ரா சிக்குடையான்
ராசி யதற்கு மூன்றதானால்
ததுறு சனிக்கில் பிதாத்தூக்கம்
தயங்கி நிற்பன் தரணியிலே.

76. சோமற் கெட்டில் ஏழாறில்
சுபக்கோள் நோக்கில் ராசாவாம்
சாமக் கதிரும் லக்கினத்தில்
தழைத்து நிற்க நானிலத்தில்
கோமற் குருவும் புகற்கலையாம்
கொடுங்கோள் சனிசேர் சோசியத்தில்
பூமற் றடங்கண் மடமாதே
பூமிக் கரசா மிகவாழ்வன்.

77. உதையம் ரெண்டு மூன்றதனில்
உகந்து பத்துப் பன்னொன்று
விரைய மான பன்னிரண்டில்
மேவு சுபக்கோள் நின்றிடினும்
மதைய மான கரிபரிதேர்
மன்ன ரதிகர் சூழ்ந்திடுவார்
அதிக மான வாழ்வுபெற்று
அவனிக் கரசாய் வாழ்ந்திடுவான்.

78. கேந்திர திரிகோ ணத்தில்
கீர்த்தியாய் சுபக்கோள் நிற்கில்
காய்ந்ததீக் கோள்க ளெல்லாம்
திரிசட்டி லாபம் பெற்றால்
சேர்ந்தநல் கோள்க ளெட்டும்
திறமுடன் ஒன்றாய் கூடில்
ஆழ்ந்திடு மலையுஞ் சூழ்ந்த
அரசருக் கரச னாமே.

79. சென்மத்தில் நீச நிற்கல்
சிறப்புட நீசர் வீட்டான்
தன்னுட னுச்ச ராசிக்
கதியனு மதிக்கு நன்றாய்
நன்னொத்த கேந்தி ரத்தில்
நயந்துதா னிற்கு மாகில்
தன்மத்தி லதிக வானாந்
தாழாத செல்வ னாமே.

80. சென்மத்தில் சசிமால் பொன்னன்
திறமுட நிற்கு மாகில்
நன்றொடு பாக்ய லாபம்
நயந்திட நோக்கு மாகில்
மன்னற்கு மன்ன னாவன்
மாருத செல்வ னாகிப்
பொன்னொத்த மேனி யாளே
பூபதி யாவ னென்றே.

81. திரிகோண மதனில் மிக்க
சேர்ந்துதான் காரி நிற்க
பரிவான சொட்ச மூலத்
திரிகோண மதனில் நிற்க
கரிவான கர்ம மந்தி
ரத்திலே நிற்கு மாகில்
விரிவான செல்வ முண்டாம்
வீரியத் தாச னாவான்.

82. மறையோன் வியத்தில் தானிருக்க
மந்தன் லாபத் ததிலுறவே
இறையோன் தனக்குப் பன்னிரண்டி
லக்கி னேசன் தானிருக்க
கறைசே ரிருளைக் கடிந்தவன்
கடிது மூன்றுக் குடையவாகும்
குறையா திருக்கப் புவனமெங்கும்
குலாவு பரசுக் கரசாமே.

83. ஐந்தி னில்ச சிபொன்னிற்க
அமைந்த கேந்தி ரத்திலேதான்
விந்தை யேவி யா ன்நின்றார்
ராசீ சன்தி றத்திருக்க
சந்து வாய்பொ ருளுந்தேடி
தர்ம மேய ளிக்கவல்லன்
ஐந்த றிவாழ் வுண்டாகி
அரச னுக்க ரசனாமே.

84. இருமூணு ராசிக் குள்ளே
இசையுடன் கோளும் நிற்க
திருவொரு மதியு நன்றாய்
திறமுடன் லாபம் நோக்க
தருபவன் ராசி நாதன்
கேந்திர திரிகோண் முற்றால்
திருவுடன் செல்வ முண்டாம்
செகத்துளோர்க் கரச னாமே.

85. அஷ்டம ராசி நாதன்
குருபுகா லக்கி னத்தான்
இஷ்டமாய் கேந்தி ரத்தி
லிருந்திடில் வயசு நூறும்
திட்டமே உடையர் நல்ல
திரவிய லாப முண்டாம்
பொட்டென அரச னாவான்
பூசுர முனிவன் சொன்னான்.

86. திரிகோண கேந்தி ரத்தில்
செல்வமாய் கோள்கள் நிற்கில்
வரிகுண மூன்று மாறும்
பதினொறில் தீய்க்கோள் நிற்க
நெறிகுண லக்கி னத்துக்
கேழினில் புதனி ருக்க
குறிகுண தோச மெல்லாம்
குறைந்திடுந் தீமை போமே.

87. ஆறுகோ ளுச்ச மாக
அலையாத மான முள்ளோன்
தேரிய கோட்கள் கூடில்
தீமைக்கோர் நீசன் தானும்
ஊரவோ நோக்கில் லாம
லுகந்தகேந் திரத்தி னிற்க
வீரியத் தரச னாவன்
மேன்மைகண் டுரைத்த வாறே.

88. கர்மசென் மத்த திபதிமரியே
கலந்திருந்து மொருவீடு மானக்கால்
வர்னமாம்பதி னொன்றுக் கதிபதி
மகிழ்ந்திருந்துங் கூடாமல் நின்ருக்கால்
சொர்னமாரி மிகுந்தே பொழிந்திடும்
துரைகள்சிங்க மெனப்பெயர் விளங்கிடும்
கர்னராசனைப் போலே யுதவுவன்
காசி னிக்கு ளரசென லாகுமே.

89. திரிகோணத் துடையோன் தானும்
திரைநாத னுடனே கூடில்
பரிவான திரிகோ ணத்தில்
பார்த்தவ னின்ற போது
மரியாதி ஒன்றுக் கொன்று
மகிழ்ந்துட னோக்க முற்றால்
கரியானைக் கினையே யாவன்
காசினி யோற்குச் சொன்னேன்.

90. ஒன்றுநான் கைந்தீ ரொன்பான்
இருநான்கு குடையோன் தானும்
திண்ணமா யொருவீ டாகி
தீர்க்கமாய் நிற்கும் போது
தண்மையாய் வசனஞ் சொல்வான்
தாஷ்டிக முடையோ னாகும்
அண்ணலாற் பூசை செய்து
அவனியை முழுது மாள்வான்.

91. சோமற்கே ளைந்தில் தானே
துளங்கவே கிரக மெல்லாம்
வாமன ரூபன் மெத்த
வாக்குமே உதவி யாகும்
காமத்தால் மிகுதி மெத்த
கனதனத் தலைவ னாவன்
சூமத்த அரச னுக்குத்
துரந்தர னாவ னன்றே.

92. நந்தி ரேசனே பெலயீன னாகி
நட்ட ராசியில் பெலயீன னாறில்
தந்தி ரமானயீ ராறில்நின் றக்கால்
தழைத்தி டாதுஅற் பாயுசுஆ குங்காண்
சுந்த ரமாகலக் கினரந்தி ரேசனுந்
துலங்கி டாமலக் கினங்கேட்டா ராகிடில்
அந்தி ரமாகிப் பிலங்கெடும் நோயறும்
ஆய்சு அற்ப மாகிடுங் காணுமே.

93. அருணன் மைந்தனும் அஷ்டமத் தானுமே
ஆய்சு ரெண்டினுக்க திபன்பெலம் பெற்றால்
மரண மில்லைவெ குசெல்வமா குங்காண்
மாநி லத்தின திகாரியு மாகும்
கரண லக்கினம் சந்திரன் கூடி
கதிர வன்றானு மீராறில் நின்றும்
விரண மாகிடி லீராறில் நின்றால்
மேன்மை நல்லவர் நோக்கும்தா தியே.

94. நோக்க மாகிய லக்கினந் தன்னில்
நுன்ன தாகியி ருந்திட லேதான்
தீர்க்க மாகவே ஆயுசுடன் செல்வம்
சிறப்ப தாகம கிழ்ச்சிய தாகும்
மார்க்க மாகவி ருந்திடில் பத்தில்
மகிழ்ச்சி யாகநட் பாட்சியுட்ச மித்ரு
சேர்க்கை யாகயி ருக்கதீர்க்காய் சுவாகு
செல்வ னாகயி ருப்பன்காண் முன்னே.

95. கர்ம லக்கினத் தட்டமத்த திபதி
கலந்து கேந்திரந் தன்னிலே நின்றால்
வர்ம மானச னியுடனே கூடி
மகிழ்ந்து கேந்திர சொல்திரி கோணம்
நன்மை யாகவே நின்றிடில்தீர்க் காய்சு
நாலி லெட்டினில் சுபக்கோனி ருந்திடில்
சென்ம நாதனே பலமாயி ருந்திடில்
செய்ய பொன்னவன் நோக்கிடில் தீமை.

96. செகத்தில் வாழவுந்தீர்க் காய்சோடு வாழ்வர்
வாய்மை யானதி ருமூர்த்திசண் முகரும்
மகிழ்ந்த ருத்திரன் தீக்கோளுடன் கூடில்
ராமை யானவர் கேந்திரி கோணத்தில்
நன்மை யாகவே நின்றிடில் செல்வம்
தூய்மை யாகி யிருந்தால்தீர்க் காய்சும்
துக்க மொன்றிலை வெகுநாளி ருப்பனே.

97. எட்டி லேழினிற் சுபராளி ருக்க
இலங்கு மூன்றிலி ருமூன்றிலா பத்தில்
துட்ட ரானவர் நின்றிடில்பூ ரணமாம்
துலங்கு சந்திரன் லக்கினத்தே நிற்க
சிட்ட ரானகு ருபுகர்நோக் கிடவே
சிற்ப லக்கின கேந்திரத்தே நிற்க
நட்ட மாகிய தீவினை தீர்க்கும்
நாம தாகதீர்க் காய்சுடனி ருப்பனே.

98. இரண்டுக் கெழுப திதன்னுடனே
நிக்கப் பொன்னி னைனோக்கின்
திரண்ட எட்டி லீராறில்
திசைக ளாலு மாய்சுசொல்லும்
மருண்ட மான்விழி மயிலேமானே
சுதன் மங்கைக் கதிபதிதான்
இருண்ட நூலோர் கவிஞருந்தான்
இயம்பு வார்கள் தரணிதனில்.

99. மார கனுடனே மந்தனுங் கூடினால்
மாநி லத்தவர்க் குயிருங்கொடுத் திடார்கள்
தீர மானதோ ரெல்லாகி ரகமும்
திசையில் தன்பலன் தானுங்கொடுத் திடார்கள்
திரம தானவன் முன்னோந்தி சையிலே
செல்வ முமதிலே நன்மையே யாகும்
நேர்மை யாகிய நின்றபெருஞ் செல்வம்
நேச மாகிய ழிப்பன்மயில் மின்னே.

100. திரிகோண நாத னுக்கு
சேர்ந்திடும் பத்தின் ரெண்டு
உரியான எட்டான் வீட்டி
லாதவன் மைந்தன் வந்தால்
திருவோடு மனையும் வேறாய்
செல்வமும் பாழ தாகும்
அரியோடு குழலி னாளே
அறிந்தவர்க் குரைத்த வாறே.

101. காரிதான சேரு நாளில்
காலனும் வருவன் கண்டாய்
கூர்வேல் விழியாள் மைந்தன்
குறைந்திடுங் கபாட மாக
அரியரன் உரைத்த நூலை
அம்புவி யோர்க்குச் சொன்னேன்
ஓரையு நவாங்கி ஷத்தான்
இருந்தனற் கெட்டான் வீட்டில்.

102. பெருகும் பொன்னு மைமூன்றும்
போற்றுந் தன்ம அதிபதியும்
மருவும் பலமா ருய்ந்து
வண்மை யறிந்து பலன்கண்டு
உருகுந் தயவு உண்மைகளும்
முகந்த புத்ரர் பிரபலமும்
பருகு முண்டு இல்லையென்று
பகர்ந்து பார்த்துப் பலனுரையே.

103. இறையவன் பலனில் லாதே
இறையவற் கஞ்ச ரேழில்
குறையுளார் கூடி நிற்கில்
குறைந்திடுங் குருந்து தானும்
மறையவர்க் கஞ்சான் வீட்டிற்
கதிபதி மறைந்து நிற்கில்
கறையுள ராகு கேது
கலந்திடில் மைந்தர் தோஷம்.

104. ஐந்தவன் பிலமில் லாதே
சுபனுட நோக்கில் லாமல்
ஐந்துளா ரீரா றெட்டில்
அடங்கியே நிற்கத் தானும்
மந்தனுந் தீர்க்க மாக
மடிந்திடில் குழவி தானும்
செந்திரு மொழியி னாளே
திருவரு ளுரைத்த வாறே.

105. அஷ்டவன் ஐந்தில் நிற்க
ஐந்தவ னெட்டில் நிற்க
திட்டமா யீரா றில்தான்
சிலுகுடன் நிற்பா ராகில்
இஷ்டமாய் மதுவாத் சாது
ஏரிலைக் கன்னி கேளாய்
பட்டுள குழலி னாளே
பாவலர்க் குரைத்த வாறே.

106. ஓரை யாதிபன் குரூரனைக் கூடினால்
ஒளிவி லான்சுவு பாக்கிய நல்லாம்
ஓரை யாதிப னாறெட்டில் பன்னிரண்டில்
உற்று ருக்கிலுந் தீயரைக் கூடில்
வீர மில்லைந லமில்லைமேன் மையுமே
மெத்த வில்லைய திபதியு முண்டாம்
காரி லங்குகுழ லேஎ கினமே
கற்ற நாவலை கற்றுரைத் தார்களே.

107. சஷ்ட்டம் வஷ்டம்வி யத்துக்க திபதி
தன்னு டனவனே றூரனைக் கூடி
இஷ்ட மாகவே லக்கினத் தேயன்
இருந்து வாரது என்செய்யுங் கேளுங்காண்
துஷ்ட மாகவே துன்பமுங் கொடுத்திஞ்
சோம்ப லாகுமே செய்தொழிலு மிங்கு
நஷ்ட மாகுமே செயங்கொடுத் திடார்
நன்மை தின்மைய தாகுங்க ருமமே.

108. லக்கி னத்தினில் பாவரி ருந்திடில்
லக்கி னேசன் பலவீன னாகியே
விலக்க மாகவே மாபாவி யாகியே
மேவி யேதுலை யந்தத்திருந் திடினில்
திலக்க மானதோர் திரேகமி ளைத்திடுஞ்
செல்வ மேயிலை பதிபாத்திருந் திடினில்
இலக்க மானதோர் பெண்ணமு தேசொலும்
இப்பு விதனி லுண்மைய தாகுமே.

109. லக்கினந் தன்னில் பவரி
ருக்கவே குளிகன் றானும்
மிக்கவே திரிகோ ணத்தில்
மேவியே இருக்கும் போது
லக்கின நாதன் பாவி
தன்னுடன் கூடி நிற்கில்
உக்கிர யரச ராலே
ஊதுகா மாலை பேயால்
சிக்கியே அலைந்து மெத்த
தீவினை யாகு மன்றே.

110. இறையவன் பலமில் லாதே
இறையவர் கஞ்சா ரேழும்
குறையுளார் கூடி நிற்கில்
குறைந்திடுங் குருந்து தானும்
மளையவர் கஞ்சான் வீட்டில்
அதிபதி ராகு நிற்கில்

குறையுள பேர்கள் கூடில்
விளங்கினும் சிசுவும் மனையும்
நிரைமலர்க் குழல னாளே
நாவலர்க் குறைத்த வாறே.

111. ஐந்தவன் பிலமில் லாதே
சுபனுடன் நோக்கில் லாமல்
ஐந்துள னீரா றெட்டில்
அடங்கியே நிற்கத் தானும்
மர்தனு மஞ்சில் நிற்கும்
மகவது மில்லை என்க
செந்திரு மொழியாள் தானும்
செகத்துளோர்க் குரைத்த வாறே.

112. தினகரன் தனக்கு முன்பின்
செழுமதி யல்லாக் கோள்கள்
இனிதுடன் வந்து நிற்கி
லியம்புவார் கேசரி யென்றே
புனிதமாய் கல்வி செல்வம்
பூவரால் வரிசை யுள்ளோன்
கனியிதழ்ச் செவ்வாய் மின்னே
கற்றவ குறைத்த வாறே.

113. சுகந்தான வீட்டில் உச்சஞ்
சொல்லிடுங் கேந்தி ரத்தில்
பொங்கியே பலமாய் நிற்கில்
புகழ்பெறு மாள்வி யோகம்
மங்கையர்க் கரசன் றூபி
மன்னரால் வரிசை யுள்ளோன்.

114. நீசபங்க ராச யோக
நீதியால் உரைந் திடில்
நீசநின்ற ராசி நாதன்
உச்சமாட் சியும்எய் திடினில்
ஆச வம்பு லிக்குமோர்
நாலு பத்தி சைந்திடில்
தேசமெங்கு மாள்வ னென்று
செப்பினார் களுண் மையே.

115. புரக்கும் தனத்தோன் லக்கினத்தோன்
புகழும் லாபத் ததிவோனும்
பெருக்குங் குருமால் மதிவெய்யோன்
பிலத்தே கேந்தி ரதிரிகோணம்
சிறக்குங் கீரு சுஆயுசு
சிவிகை சுகந்த மிருகமதன்
நிரைக்கும் புவிக்கு அரசுகொலும்
நீதி நிச்ய மிவற்கென்றே.

116. பாக்கியத் தானத் தானும்
லக்கினத் ததிபன் இன்பத்
தாக்கமாங் கோளிம் மூன்றும்
நட்பாட்சி யுச்ச மேற
நீக்கிசேய்க் கிடத்தி டேனும்
திரிகோணத் தேனும் நிற்க
காக்குமன் னரரு கிறுப்பு
திருவுடன் களித்து வாழ்வன்.

117. மிக்கதோர் கருமந் தன்னில்
பரவிலா பங்க ளேறத்
தக்கதோர் பலங்க ளுண்டாம்
லாபத்துக் கதிபன் தாழில்
தொக்கெனச் செலவு முண்டாம்
அளவிலக் கினமே யேற
திக்கெலாம் புகழ வாழ்வான்
அதனிலுஞ் சிறக்கும் வாழ்வே.

சந்திரா பரணம் முற்றும்.

வாணி சகாயம். தண்டாயுதபாணி
ரட்சிக்க வேணும்.

# பாடற் முதற்குறிப்பு அகராதி


| அ | பாடல் எண் |
|---|---|
| அன்றதோர் | 14 |
| அன்னமோ | 52 |
| அங்குமு | 54 |
| அஷ்டம | 85 |
| அருணன் | 93 |
| அஷ்டவன் | 105 |
| **ஆ** | |
| ஆமே | 33 |
| ஆட்டி | 59 |
| ஆகாது | 64 |
| ஆறுகோ | 87 |
| **இ** | |
| இழக்கு | 35 |
| இரவிக் | 55, 56 |
| இருமூணு | 84 |
| இரண்டுக் | 98 |
| இறையவன் | 103, 110 |
| **உ** | |
| உரைத்திடி | 2 |
| உ.ரைக்கு | 32 |
| உதித்த | 67 |
| உதையம் | 77 |

எ

எய்துங் 27

எங்கே 60

எட்டி 97

ஐ

ஐந்தினில் 63

ஐந்தவன் 104, 111

ஒ

ஒன்று 9, 41

ஒன்று நான் 90

ஓ

ஓரைத்திரி 36

ஓரைநா 66

ஓரை 106

க

கருதிய 21

கன்னி 40

கதிரன 68

கறைமதி 69

கர்மசென் 88

கர்ம 95

காணு 18

காரிதான 101

குடும்பங்களின் 46

கேந்திர 78

கொடியவர் 10

| | |
|---|---|
| கொம்போ | 15 |
| கொம்பே | 31 |
| கோட்டிப் | 58 |

**ச**

| | |
|---|---|
| சகோதரஞ் | 47 |
| சத்தியஞ் | 49 |
| சத்துருஞ் | 50 |
| சரத்தி | 57 |
| சஷ்ட்டம் | 107 |
| சாற்று | 28 |
| சீதரன் | 65 |
| சுரர்குரு | 72 |
| சுகந்தான | 113 |
| செங்க | 1 |
| செவ்விய | 24 |
| செனித்த | 61 |
| செய்யவன் | 70 |
| சென்மத்தில் | 79 |
| சொல்லு | 29 |
| சொல்லலாஞ் | 37 |
| சோமற் | 76 |
| சோமந்கே | 91 |

**த**

| | |
|---|---|
| தப்பா | 34 |
| தருஒன்பதி | 39 |
| திரவியம் | 53 |
| திரிகோண | 81, 86, 89, 100 |
| தினகரன் | 112 |

| | |
|---|---|
| தீய்மை | 96 |
| தேடிய | 4 |
| தேனேஒ | 7 |
| தேசுநல் | 45 |
| தேன்மொழி | 62 |
| தோகை | 19 |
| **ந** | |
| நந்தி | 92 |
| நாரி | 8 |
| நீசபங்க | 114 |
| நோக்க | 94 |
| **ப** | |
| பரிசோ | 16 |
| பாவக் | 11 |
| பாரியே | 51 |
| பாக்கியஞ் | 116 |
| பிதிரி | 75 |
| புந்திதான் | 71 |
| புரக்கும் | 115 |
| பெருகும் | 102 |
| பொன்னரா | 3 |
| பொன்ன | 13 |
| **ம** | |
| மரணம் | 12 |
| மன்னும் | 17 |
| மட்டுரை | 23 |
| மறையோன் | 30, 82 |

| | |
|---|---|
| மனைசுகம் | 48 |
| மழையவன் | 73 |
| மாதுகே | 6 |
| மாதுகேள் | 22 |
| மாரகனுடன் | 99 |
| மின்னிய | 5, 20 |
| மின்னியலா | 42 |
| மிகுந்த சேய | 43 |
| மிக்கதோர் | 117 |
| முற்று | 38 |
| முதுமகன் | 74 |

**ல**

| | |
|---|---|
| லக்கி | 108 |
| லக்கினந் | 109 |

**வ**

| | |
|---|---|
| வல்ல | 25 |
| வாகனகா | 44 |


*************

T.7218
T.7218